

# மூலநோய்க்கு லேசர் மற்றும் அதிநவீன (STAPLER) சிகிச்சை

ஜீரண மண்டலத்தின் கடைசிப் பகுதியான ஆசனவாயில் ஏற்படும் மிக முக்கியமான பிரச்சனை தான் மூலம் (Plies) ஆகும். மூலநோய் பற்றி மக்களிடையே பல தவறான கண்ணோட்டங்கள் இருப்பதால், அதன் அறிகுறிகளையும் நவீன சிகிச்சை முறைகளையும் பற்றி காண்போம்.

**மூலம் என்றால் என்ன?**

**அதன் வகைகள் யாவை?**

மூலம் என்பது ஆசனவாயில் உள்ள இரத்த நாளங்களின் வீக்கம் ஆகும். இதனை உள் மூலம், வெளி மூலம் என வகைப்படுத்தலாம்.

**மூலம் எதனால் ஏற்படுகிறது?**

ஆசனவாயில் உள்ள இரத்த நாளத்தில் அழுத்தம் ஏற்படுவதால் மூலம் ஏற்படுகிறது. இதற்கு அடிப்படைக் காரணம், பல நாட்களாக சரிவர கவனிக்காமல், விடப்பட்ட மலச்சிக்கல் தான் (Constipation) பரம்பரை பரம்பரையாக ஆசனவாய்ப் பகுதியில் உள்ள இரத்தக் குழாயின் துணை மற்றும் இணைப்புத் திசுக்கள் பலவீனமாக இருந்தால், சிலருக்கு மூலம் வரலாம். அதிக நேரம் உட்கார்ந்து வேலை செய்தாலோ அல்லது தொடர்ந்து குறைந்த அழுத்தப் பகுதியில் (விமானத்தில்) பணிபுரிபவர்களுக்கு மூலம் வரலாம். நாள்பட்ட வயிற்றுப்போக்கு (Diarrhea, Dysentry) மற்றும் உடல் பருமனால் மூலம் வரலாம். மலக்குடல் புற்றுநோய்



Dr. கண்ணன்



மற்றும் கல்லீரல் நோயினாலும் ஆசனவாயின் இரத்த நாளங்களில் அழுத்தம் உண்டாக்கி மூலம் வரலாம். பெண்களுக்கு கர்ப்பக் காலங்களில் வயிற்றின் கீழ்ப்பகுதியில் அழுத்தம் அதிகமாவதாலும், மலச்சிக்கல் மற்றும் Progestrone ஹார்மோன் காரணமாகவும் மூலம் வரலாம்.

நாம் பெரும்பாலும் நின்று கொண்டே இருப்பதால், ஆசனவாயை நோக்கி உடல் உறுப்புகள் நேரடியாக அழுத்துவதால், ஆசனவாய் இரத்த நாளங்களில் அழுத்தம் அதிகமாகி மூலம் உண்டாகலாம். இதனை This is the penalty paying by the human race for the upright posture என்று கூறலாம். பிராணிகளுக்கு மூலநோய் வருவதில்லை.

### மூலத்தை எத்தனை நிலைகளாக பிரிக்கலாம்?

மூலத்தை நான்கு பிரிவுகளாகப் பிரிக்கலாம். அவை

1. முதல் நிலையில் இரத்தப்போக்கு இருக்கும். சதை வெளித்தள்ளாது. வலி இருக்காது.
2. இரண்டாம் நிலையில் மூலம் வெளியே வந்து தானாகவே உள்ளே சென்று விடும்.
3. மூன்றாம் நிலையில் வெளியே வரும் மூலத்தை கையால் உள்ளே தள்ள முடியும்.
4. நான்காம் நிலையில் மூலம் ஆசனவாய்க்கு கீழே தள்ளிய நிலையிலேயே இருக்கும் (Prolapsed Piles).

### மூலத்தின் அறிகுறிகள்

1. மலம் கழிக்கும் போது ஆசனவாயில் வலியற்ற இரத்தப்போக்கு ஏற்படுதல்.
2. அரிப்பு, எரிச்சல் மற்றும் வீக்கம்
3. இரத்தம் உறைந்து போய் கட்டியாகி விட்டால் அதனால் வலி வரும்.

### மூலநோயை எவ்வாறு அறிந்து கொள்வது?

மேற்கூறிய அறிகுறிகள் ஏதேனும் இருந்தால் உடனடியாக மருத்துவரை அணுகி தகுந்த ஆலோசனை பெற்று, தேவையான பரிசோதனைகள் மேற்கொண்டு, (Blood Test, Proctoscopy, Sigmoidoscopy and Colonoscopy) சரியான சிகிச்சை முறைகளை மேற்கொள்ளலாம்.

### சிகிச்சை முறைகள் என்னென்ன?

#### முதல் நிலை மூலம்:


மலச்சிக்கலைத் தவிர்க்க வேண்டும். அதிக நார்சத்து உள்ள உணவை (காய்கறிகள், பழங்கள் மற்றும் கோதுமை) அதிகமாகவும் மாவுச்சத்து உள்ள உணவை குறைவாகவும், மேலும் அதிகளவு தண்ணீர் உட்கொள்வதன் மூலம் மலச்சிக்கலை தவிர்க்கலாம். Laxatives எடுத்துக் கொள்வதால் மலச்சிக்கலை தடுக்கலாம். வீங்கி முடிச்சு போல் உள்ள இரத்தக் குழாய்களை Sclerotherapy அல்லது Laser மூலம் சுருங்கச் செய்யலாம்.

### இரண்டாம் நிலை:

மலச்சிக்கலை தவிர்த்து, மலமிளக்கிகளை (Laxatives) எடுத்துக் கொள்வதன் மூலமும் சரி செய்யலாம். மேலும் வீங்கிய நிலையில் உள்ள இரத்த நாளங்களை Laser, Infrared Coagulation, Sclerotherapy, Rubber Band Ligation Technique மூலமாகவும் சுருங்கச் செய்யலாம்.

### மூன்றாம் மற்றும் நான்காம் நிலை மூலம்

இதனை மருந்தால் குணப்படுத்த முடியாது. அறுவை சிகிச்சை மூலமாகவும் லேசர் மூலமாகவும் மற்றும் அதிநவீன Stapler சிகிச்சை மூலமாகவும் மட்டுமே குணப்படுத்த முடியும்.



### லேசர் சிகிச்சை என்றால் என்ன? அதன் சிறப்பு என்ன?

லேசர் மூலமாக எல்லா நிலை மூலத்தையும் குணப்படுத்த முடியும். ஆரம்ப நிலை மூலத்திற்கு (முதல் மற்றும் இரண்டாம் நிலை) லேசர் கதிரை மூலத்தின் மேல் செலுத்தி, உள்ளிருக்கும் இரத்தத்தை உறையச் செய்வதே சிறந்த சிகிச்சை முறையாகும். முற்றிய நிலை மூலத்தை (மூன்றாம் மற்றும் நான்காம் நிலை) லேசர் சிகிச்சை மூலம் சிகிச்சை செய்வதால், இரத்த இழப்பு இருக்காது. வலியோ மிக மிகக் குறைவு. ஆஸ்பத்திரியில் ஒரு நாள் மட்டும் இருந்தால் போதுமானது. விரைவில் பழைய நிலைக்கு திரும்பி நாம் அன்றாட வேலைகளை கவனிக்கலாம்.

### பொதுவாக லேசர் சிகிச்சைக்கு பிறகு கடைபிடிக்க வேண்டியவை என்ன?

1.காலையும் மாலையும் SITZ Bath எடுத்துக் கொள்ள வேண்டும்.

2.கடினமான வேலைகள் செய்வதை சில நாட்களுக்கு தவிர்க்க வேண்டும்.

3. மலச்சிக்கல் ஏற்படாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.

### STAPLER சிகிச்சை என்றால் என்ன? அதன் சிறப்பு அம்சங்கள் என்னென்ன?

மற்ற அறுவை சிகிச்சைகளுக்கு பயன் படுத்தப்படும் Stapler போன்று அல்லாமல், மூலத்திற்காகவே, பிரத்தியேகமாக வடிவமைக்கப்பட்ட நவீன கருவி தான் PPHO3 எனப்படும் Haemorrhoidal Stapler ஆகும். இந்த கருவி மூலமாக ஆசனவாயில் உள்பகுதியில் Dentate Lineக்கு மேல் மூலத்துடன் கூடிய சதையை எடுத்த பிறகு அந்த இடத்தை Stapler கடிண ஆல் இணைப்பது தான் இதன் சிறப்பு அம்சமாகும். இந்த சிகிச்சையின் போது ஆசனவாய்க்கு மேலுள்ள தசைகளை அதிகம் வெட்டாமல் வேண்டிய அளவு மட்டுமே வெட்டுவதால், மலம் வெளியேறுவதைக் கட்டுப்படுத்தும் சக்தி ஆசனவாய்க்கு அப்படியே இருக்கும்.

### இந்த முறையில் சிகிச்சை மேற்கொண்டால்

1.இரத்த இழப்பு இருக்காது. வலியோ மிக மிகக் குறைவு.

2.ஒரு நாள் மட்டுமே மருத்துவமனையில் இருந்தால் போதும்.

3. உடனடியாக பழைய நிலைக்கு திரும்பி அன்றாட வேலைகளைச் செய்யலாம்.

4.சிகிச்சைக்கு பிறகு Dressing, SITZ Bath மற்றும் நீண்ட நாட்களுக்கு மருத்து மாத்திரை கள் தேவையில்லை. எனவே இதனை மூலநோய்க்கான மிக நவீன சிகிச்சை முறை என்றே சொல்லலாம்.

நோய்நாடி நோய் முதல்நாடி அது தணிக்கும் வாய் நாடி வாய்ப்பச்செயல் -என்ற குறளுக்கேற்ப.

மலச்சிக்கலைத் தவிர்ப்போம், மூலத்தை தடுப்போம்:

24 Hours Emergency / Ambulance / Pharmacy

E.mail : dr@chennaigastro.com

web : www.chennaigastro.com, www.chennaigastroentirologist.com


தொடர்புக்கு

Dr.R.Kannan, DIRECTOR

New No.177/3, M.T.H.Road, Villivakkam, Chennai – 600 049.

for Emergency : 044-26180099, 43577755

for Appointments : 8754590908, 8754590905, 9150555260